**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.4/2019-PW-1**

| | |
|---|---|
| Name | திரு.திருமுருகன் |
| Father Name | திரு.குப்புசாமி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.02.2026.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் ஆற்காட்டில் வசித்து வருகிறேன். பாத்திர வியாபார கடை வைத்துள்ளேன். அந்த கடையின் பெயர் ஏ.கே.மெட்டல்ஸ் ஆகும். அந்த கடை ஆற்காடு அண்ணாசாலையில் உள்ளது. அந்த கடைக்கு இரண்டு கதவு எண்கள் உள்ளதா என்றால் ஒரு கதவு எண்.41 என்று மட்டுமே உள்ளது. அந்த கடை RCC கட்டிடம் என்றாலும், அதற்கு மின்னிணைப்பு உள்ளது என்றாலும் சரிதான். அந்த கடை ஆற்காடு பேருந்து நிலையம் எதிரில் உள்ளது. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நஷ்டயீடு கேட்டுள்ளேன். இந்த வழக்கை முதலில் தாக்கல் செய்யும் போது ஷகிலா என்பவர் மீது மட்டுமே தாக்கல் செய்தேன். அவர் ஆற்காடு நகராட்சியில் ஆணையராக பதவி வகித்து வந்தார் என்றால் சரிதான். ஆரம்பத்தில் இந்த வழக்கை அவரது பெயரில் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்திருந்தேன் என்றாலும், அவருடைய பதவியின் பேரில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது ஏன் பிரதிவாதியாக நகராட்சி ஆணையர் என்ற பெயரில் தாக்கல் செய்யாமல் நகராட்சி ஆணையரின் பேரில் மட்டும் தாக்கல் செய்தேன் என்றால் அவர் தான் என் கடையிலிருந்த பொருட்களை எடுத்துச் சென்றார் என்பதால் அவ்வாறு தாக்கல் செய்தேன். அந்த கடை அமைந்துள்ள கட்டிடம் மற்றும் நிலத்திற்கு நான் உரிமையாளர் அல்ல என்றாலும், நான் அந்த கடையை வாடகைக்கு எடுத்து அதில் வியாபாரம் செய்து வருகிறேன் என்றாலும் சரிதான். அந்த சொத்தின் உரிமையாளர் தாகீருன்னிசா பேகம் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு அவர் முத்தாவள்ளியாக இருந்தார் என்றால் சரிதான். தாகீருன்னிசா பேகம் பரம்பரையாக முத்தாவள்ளியாக இருந்து வருகிறாரா அல்லது தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் நியமிக்கப்பட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் நடத்தி வரும் கடையை தாகீருன்னிசா பேகம் மற்றும் அவரது கணவர் ரஹமதுல்லா ஆகிய இருவரிடமும் வாய்மொழியாக வாடகைக்கு பேசி முன்பணமாக ரூ.15 லட்சம் செலுத்தி வாடகைக்கு எடுத்து பிரதி மாதம்

ரூ.1500/– செலுத்தி வந்தேன். வாய்மொழி வாடகை ஒப்பந்தம் என என்னுடைய வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். வாடகை பிரச்சனை சம்மந்தமாக நான் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆற்காடு நீதிமன்றத்தில் அ.வ.எண்.29/2016 தாகீர்ருன்னிசா பேகம் மற்றும் அவரது மகன் அசேன்அலி அக்பர் ஆகியோர் மீது தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகாததால் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்தக் கடையை அசேன்அலி அக்பர் காலி செய்ய சொன்னதால் நான் அந்த வழக்கை தாக்கல் செய்தேன். வாடகை உயர்த்தி கேட்டு நான் தர மறுத்ததால் காலி செய்ய சொன்னார்களா என்றால் அவர் தீடீரென என்னை காலி செய்ய சொல்லிவிட்டார். நான் கால அவகாசம் கேட்டும் அவர் மறுத்துவிட்டார். அ.வ.எண்.29/2016 தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அசேன்அலி அக்பருக்கு வழக்கறிஞர் மூலம் கால அவகாசம் கேட்டு அறிவிப்பு அனுப்பவில்லை. நான் அந்தக் கடையை வாய்மொழி ஒப்பந்தம் மூலம் பேசி ரூ.15லட்சம் முன் பணமாக கொடுத்ததாகவும், மாதம் ரூ.1500/– வாடகைக்கு பேசியதாகவும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அசேன்அலி அக்பர் என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.5484/2016 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னையும், மாவட்ட ஆட்சியர், ஆற்காடு நகராட்சி ஆணையர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், ரவி மற்றும் மலர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாக சேர்த்திருந்தார் என்றால் சரிதான். மலர் என்பவர் என் கடைக்கு பக்கத்து கடைக்காரர். நான் அனுமதியின்றி அந்த இடத்தில் கட்டுமானம் மேற்கொள்வதாக W.P மனுவில் அசேன்அலி அக்பர் சொல்லியிருந்தார் என்றால் சரிதான். அந்த W.P மனுவில் ஆற்காடு நகராட்சி ஆணையர் 6 வார காலத்திற்குள் இரு தரப்பினர்களையும் அழைத்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதை தொடர்ந்து ஆற்காடு நகராட்சி ஆணையர் எனக்கு அனுப்பிய அறிவிப்பை பெற்று விசாரணைக்கு ஆஜராகி என் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசேன்அலி அக்பர் தரப்பிலும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விசாரணை முடித்து தனது அறிக்கையை ஆற்காடு நகராட்சி ஆணையர் தாக்கல் செய்தார். எனக்கும் ஒரு நகல் கொடுத்தார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விசாரணை செய்வதற்காக ஆற்காடு நகராட்சி ஆணையர் என்னிடம் சில படிவங்கள் கொடுத்து பூர்த்தி செய்து திரும்ப சமர்ப்பிக்க போதிய அவகாசம் வழங்கியும் நான் அந்த படிவங்களை பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் எனக்கு எந்த படிவமும் கொடுக்கவில்லை. ஆற்காடு நகராட்சி ஆணையர் பதிவு தபாலில் அனுப்பிய தபால்கள் எனக்கு கிடைக்கப்பெற்றது.

ஆற்காடு நகராட்சி ஆணையர் விசாரணை அறிக்கை தாக்கல் செய்த பிறகு அசேன்அலி அக்பர் W.P மனுவில் உள்ள எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 2020-ம் ஆண்டில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்து அதில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்க உத்தரவிட்டது என்றால் சரிதான். இதுவரை இந்த வழக்கு தொடர்பான பிரச்சனைகள் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அசேன்அலி அக்பரும், நானும் மற்றும் சிலரும் வழக்கு நடத்திய விவரங்கள் எனக்கு தெரியும். அந்த வழக்குகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் என்னென்ன உத்தரவுகள் பிறப்பித்தது என்ற விவரமும் என் வழக்கறிஞர் மூலமாக எனக்கு தெரியும். அனுமதியின்றி கட்டப்பட்டதாக பிரச்சனை ஏற்பட்டதை தொடாந்து நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் ஏற்கனவே நீதிப்பேரணை மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நிறுத்தி வைக்க வேண்டம் என தடை உத்தரவு கேட்டு நான் மனு தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்திருந்த நீதிப்பேரணை மனுவும் மற்றும் அந்த பிரச்சனை தொடர்பான நீதிப்பேரணை மனுக்களும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதி அரசரிடம் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு பிறகு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தான் மாவட்ட ஆட்சியர் முதல் மற்ற அரசு அதிகாரிகள் மற்றும் நகராட்சி ஆணையர் என்னுடைய கடை மற்றும் பக்கத்து கடையை அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடிப்பதற்கு அங்கு வந்தனர் என்றால் சரிதான். 2020-ம் ஆண்டு அவ்வாறு கடையை இடிக்க வரும் போது நான் கடையை காலி செய்ய மறுத்துவிட்டேன் என்றால் அன்றைய தினம் நான் என்னுடைய கடைக்கு போகவே இல்லை. கடையை இடிக்க இருப்பதாகவும், என்னுடைய பொருட்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் 2017-ம் வருடம் ஆற்காடு நகராட்சி ஆணையர் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவு இல்லாமல் கடையை காலி செய்யமாட்டேன் என நான் சொல்லிவிட்டேன். ஆற்காடு நகராட்சி ஆணையர் ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அனுமதியின்றி கட்டிடம் கட்டியதாக என் மீது தாக்கல் செய்த தனி புகார் குற்ற வழக்கு நிலுவையிலுள்ளது. அந்த வழக்கு தாக்கல் செய்த விவரத்தை ஆற்காடு நகராட்சி ஆணையர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் தகவல் தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கடையிலிருந்து நகராட்சி ஆணையர் எடுத்துச் சென்ற பொருட்களை திரும்ப கேட்டு என்னுடைய மனைவி நகராட்சி ஆணையருக்கு மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். நான் தான் என் மனைவியிடம் அந்த மனுவை எழுதிக் கொடுத்து அனுப்பினேன் என்றால் சரிதான். அந்தப் பொருட்களை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் நான் ஒரு உத்தரவாத கடிதம் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில்

கொடுத்திருந்த உத்தரவாத கடிதத்தில் குறிப்பிட்டிருந்த கால அவகாசத்திற்குள் நான் நகராட்சி ஆணையர் அலுவலகத்திற்கு சென்று என்னுடைய பொருட்களை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் நான் அந்த கால அவகாசத்திற்குள் நகராட்சி ஆணையர் அலுவலகம் சென்ற போது அவர் நீதிமன்ற உத்தரவு அவருக்கு கிடைக்கப்பெறவில்லை என்று சொல்லி என்னுடைய பொருட்களை தர மறுத்துவிட்டார். நான் என் மனைவியிடம் கொடுத்து அனுப்பிய மனுவுடன் நீதிமன்ற உத்தரவு நகல்களை இணைத்து அனுப்பவில்லை. நகராட்சி ஆணையரின் தனிப்பட்ட பெயரில் நான் வழக்கு தாக்கல் செய்திருந்ததால் அதை நிராகரிக்க வேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட மனு இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னர் அந்த உத்தரவை எதிர்த்து நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டில் நகராட்சி ஆணையரின் தனிப்பட்ட பெயரை நீக்கம் செய்துவிட்டு அவருடைய பதவியின் பெயரில் வழக்கை திருத்தம் செய்து மேல் நடத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அதிகாரிகளை தரப்பினர்களாக சேர்க்க நான் தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தான் ஆற்காடு நகராட்சி ஆணையர் என்னுடைய கடையிலிருந்த பொருட்களை எடுத்துச் சென்று அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்த பிறகு எனக்கு ஒரு கடிதம் அனுப்பி என்னுடைய பொருட்களை எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்திருப்பதற்குரிய செலவுத்தொகையை கேட்டுள்ளார் என்றாலும், அதை இது நாள் வரை நான் கொடுக்கவில்லை என்றாலும் கடிதம் வந்தது. நீதிமன்ற உத்தரவு இல்லாததால் நான் செலவுத்தொகையை கொடுக்கவில்லை. நான் செலவுத்தொகையை கொடுக்காததால் தான் என்னுடைய பொருட்களை நகராட்சி ஆணையர் திரும்ப கொடுக்கவில்லை என்றால் நகராட்சி ஆணையர் தான் எனக்கு நஷ்டயீடு கொடுத்து பொருட்களையும் திரும்ப கொடுக்க வேண்டும். நான் இந்த வழக்கை தவறுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.